ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2035/3 - 2017 සැප්තැම්බර් මස 04 වැනි සඳුදා - 2017.09.04

*2035/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந்திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு இரத்மலானை - மொரட்டுவை கழிவு நீர் மீள் சுழற்சிக் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் இலக்கம் 10 நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*“லக்திய மெதுர”,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஓகத்து 17,*
*5/2/2/1264.*

***அட்டவணை***

கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 546பி விஹார கிராம அலுவலர் பிரிவில் இரத்மலானை கிராமத்தில் அமைந்துள்ள திஸாநாயக வத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து 11 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | நீரோடை காப்பு வீதி ; |
| கிழக்கு | : | நீரோடை காப்பு வீதி ; |
| தெற்கு | : | திஸாநாயக வத்த வீதி ; |
| மேற்கு | : | திரு. எம். திஸாநாயக உரிமை கோருகின்ற 133/15 ஆம் இலக்க காணி. |

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை (வெளிநாட்டிலுள்ளனர்)*

*09-434*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு இரத்மலானை - மொரட்டுவை கழிவு நீர் மீள் சுழற்சிக் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் இலக்கம் 11 நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 17.
5/2/2/1265.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 547 அங்குலான வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அங்குலான டயஸ் பிளேஸ் கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் 19ஏ சீமெந்து வேலைத்தளத்திற்கு அண்மித்தவாறுள்ள காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து 68 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : திருமதி றமயா சுபாஷினி உரிமை கோருகின்ற 320 ஆம் இலக்க காணி ;
கிழக்கு : றமயா நதிய வீதி ;
தெற்கு : திரு. மஹிந்த சில்வா உரிமை கோரும் இலக்கம் 19ஏ சீமெந்துக் கல் வேலைத்தளம் ;
மேற்கு : குறித்த காணியின் எஞ்சிய பகுதி.

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை (வெளிநாட்டிலுள்ளனர்)

09-435

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.